**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. No.84/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-2 |
| Name | : | மகாலிங்கம் |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

A1,A2 present.

**<u>அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1.நான் தற்போது நல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் .கடந்த 03.09.2023 ஆம் தேதி அன்று அதிகாலை 2 மணி அளவில் பணியில் இருந்த போது திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நிலையும் மருத்துவமனை சென்று காயம் பெற்ற ஹரி கிருஷ்ணன் என்பவரிடம் புகார் வாக்கு மூலத்தை பெற்றேன்.

2. அதன் பின்பு நிலையும் வந்து நிலைய குற்ற எண் 732/2023 முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தேன். அவை சட்டப்பிரிவு 294 பி, 341, 323, 324 மற்றும் 307 506 (2)பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்தேன் திரு பாலமுருகன் அவர்கள் வசம் விசாரணைக்காக கோப்பினை வைத்து விட்டேன். அவரின் கையெழுத்து எனக்கு நேரடியாக தெரியும் அவருடன் புலன் விசாரணை நடத்திய விதத்தில் மற்றும் புலன் விசாரணை கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

3. அதன் பின்பு 3/9/2023 ஆம் தேதி அன்று ஆர் கே எம் நிட்டிங் கம்பெனி என்ற சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஹரி கிருஷ்ணன் உடன் வேலை செய்த பாண்டியன் தனபால் பூமிநாதன் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் மேலும் கம்பெனி ஓனர் ஆன நாகராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அந்த இடத்தில் ஆறு மணிக்கு முகமது பாரூக் மற்றும் ஐயர் ஆகியோர் முன்னிலையில் வரைபடம் தயார் செய்து பார்வை மகஜர் தயாரித்தேன் சாட்சிகள்முகமது பாரூக் மற்றும் ஐயர் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டேம்.

4. அதன் பின்னர் ரகசிய தகவல் தகவலாளி அடிப்படையில் எதிரிகள் கோயில் வழி பாரத் பெட்ரோல் பங்க் அருகில் பஸ்ஸிர்காக காத்திருப்பதாக தகவல் கிடைத்தது அதன் அடிப்படையில் அங்கே சென்று எதிரிகளான செல்வம், ஆண்டி செல்வம் மற்றும் சுதந்திரராஜன் ஆகிய மூவரையும் கைது செய்து நிலையம் கொண்டு வந்து கிரக பரிசோதனை செய்து அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் முன்னிலையில் எதிரிகள் சொன்ன இடத்திலிருந்து பட்டாக்கத்தியை கைப்பற்றினோம் கைப்பற்றுதல் பெயரில்.

5.அதன் பின்பு நிலையம் சென்று தேகப் பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு மருத்துவர் சந்திப் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அவரிடம் இருந்து காயச் சான்றிதழை பெற்றேன். அதன் பின்பு மருத்துவர் லோகேஷ் என்பவர் மேல் சிகிச்சை

அளித்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்பு 14.03.2024 ஆம் தேதி அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

புகார்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–1**

முதல் தகவல் அறிக்கை–**அரசு தரப்பு சான்று ஆவணம்–2**

பார்வை மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–3**

மாதிரி வரைபடம்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–4**

வாக்குமூலம்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–5**

சீசர் மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–6**

சீசர் மகஜர்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–7**

AR copy–**அரசு தரப்பு சான்று ஆவணம்–8**

AR copy–**அரசு தரப்பு சான்று ஆவணம்–9**

காயச்சான்றிதழ்–**அரசு தரப்பு சான்று ஆவணம்–10**

வாள் –**MO–1**

ரத்தக்கரை படிந்த சிமிண்ட் தரை–**MO–2**

ரத்தக்கரை படியாத சிமிண்ட் தரை–**MO–3**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எந்த விதமான குற்றமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சரி வர போல விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்தவிதமான வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்தவிதமான பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தை எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல எங்கள் காவல்துறையின் கணக்குகளுக்காக எதிரி மீது பொய்யான

வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.09 19:32:24 +0530

முதன்மை உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.